# 01-04-2024 செய்தி

## கடலில் நிகழ்த்தும் சாதனை

- இந்தியப் பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்ய ஆபரேஷன் சங்கல்ப் என்கிற பெயரில் கடற்கொள்ளையர்களின் தாக்குதலைக் தடுப்பது, கப்பல்களை மீட்பது, ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதல்களில் இருந்து சரக்குக் கப்பல்களைப் பாதுகாப்பது உள்ளிட்ட பணிகளை இந்தியக் கடற்படை மேற்கொள்கிறது.
- எம்.வி.கெம்புளுட்டோ என்கிற கப்பல் இந்தியக் கடற்கரையிலிருந்து சுமார் 220 கடல் மைல்களுக்கு அப்பால் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தாக்கப்பட்டதைக் தொடர்ந்து ஆபரேஷன் சங்கல்ப் வேகமெடுத்தது.
- ஹூதி கிளர்ச்சியாளர்களால் ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலம் தாக்கப்பட்ட ஆறு சரக்கு கப்பல்களை இந்தியக் கடற்படை இதுவரை பாதுகாப்பாக மீட்டுள்ளது.
- இந்திய கடல் எல்லையிலிருந்து 2,600 கி.மீ தொலைவில் வடக்கு அரபிக் கடல் பகுதியில் கடற்கொள்ளையர் வசமிருந்த அந்தக் கப்பலை ஐஎன்எஸ் கொல்கத்தா சில மணி நேர நடவடிக்கைக்குப் பிறகு மீட்டது.
- இந்து மகா சமுத்திரம் வழியாக அதிலும் குறிப்பாக செங்கடல், ஏடன் வளைகுடா வழியாகப் பயணிப்பது ஆபத்தாக இருப்பதால், சரக்குக் கப்பல்களுக்கான காப்பீட்டுக் கட்டணம் 35% முதல் 40% வரை அதிகரித்திருக்கிறது.
- சரக்குப் பெட்டகங்களின் (கண்டெய்னர்கள்) வாடகையும் 500 டாலரிலிருந்து 2,000 டாலராக அதிகரிக்கிறது. ஆப்பிரிக்கக் கண்டத்தின் தன்னம்பிக்கை முனையைச் சுற்றி பயணிப்பது என்றால், போக்குவரத்துச் செலவு கணிசமாக அதிகரிக்கும்.
- இந்திய கடற்படையின் செயல்பாடுகள் இந்தியாவின் வர்த்தக போக்குவரத்துக்கும் அவசியத் தேவை. இந்தியாவுக்கான 60% கச்சா எண்ணெய் இறக்குமதியும் அரபிக் கடல் வழியாகத்தான் வர வேண்டும்.
- இந்தியாவின் மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 50% அரபிக்கடல் மூலம்தான் நடக்கிறது.
- அதனால் அரபிக் கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்பது இந்தியாவின் தேவையும்கூட.

## கச்சத்தீவு : ஆர்டிஐ ஆவணங்கள்

- கச்சத்தீவானது ராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் யாழ்ப்பாணத்திலிருந்து 10.5 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது.
- மிகச்சிறிய தீவான அதன் மொத்த பரப்பளவு 285 ஏக்கர். நீளம் 1.7 கி.மீ.
- 1948-ம் ஆண்டு ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படும் வரையில் கச்சத்தீவு ராமேஸ்வரத்தின் ஜமீன்தார் வசம் இருந்தது என்றும் அதன்பிறகு அது மெட்ராஸ் மாகாணத்தின் அங்கமாக மாறியது என்றும் இந்தியா கூறியது.
- டச்சு மற்றும் பிரிட்டிஷாரின் காலனி ஆட்சி முதலே கச்சத்தீவு தங்கள் வசம் இருந்ததாக கூறிய இலங்கை, குறிப்பாக 1921 முதல் கச்சத்தீவு மீது அதிகாரப்பூர்வமாக உரிமை இருப்பதாகக் கோரியது.
- இருநாடுகளுக்கு இடையே நீண்டகாலமாக இழுபறி நிலவி வந்த நிலையில், 1974-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி, கச்சத்தீவை இலங்கையின் பகுதியாக அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அப்போது தமிழ்நாட்டு முதல்வராக கருணாநிதி பதவி வகித்தார்.

RTI **ஆவணங்கள்:**

- தங்களிடம் அனுமதி பெறாமல் இந்திய ராணுவம் கச்சத்தீவுக்கு வரக்கூடாது என்ற கூறிய இலங்கை ராணுவம், 1955-ல் கச்சத்தீவில் பயிற்சியில் ஈடுபட்டது.
- கடந்த 1960-ம் ஆண்டில் அப்போதைய அட்டார்னி ஜெனரல் செதல்வாத், கச்சத்தீவு மீது இந்தியாவுக்கே உரிமை உள்ளது என்று தெரிவித்தார்.
- கச்சத்தீவு குறித்து 1961-ம் ஆண்டு நேரு கூறியது: இந்தச் சிறிய தீவுக்கு நான் எந்த முக்கியத்துவமும் தரப்போவதில்லை. கச்சத்தீவு உரிமையை விட்டுக் கொடுப்பதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இந்த விவகாரம் மீண்டும் மீண்டும் நாடாளுமன்றத்தில் விவாதிப்பதை விரும்பவில்லை என்றார்.
- அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி 1974-ம் ஆண்டு கச்சத்தீவின் மீதான இலங்கையின் உரிமையை அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.
- முதலில் 1974-ம் ஆண்டு ஜூன் 26-ம் தேதி கொழும்புவிலும் பிறகு ஜூன் 28-ம் தேதி டெல்லியிலும் கையெழுத்தானது.

## 60 க்கும் பொருட்களுக்கு புவிசார் குறியீடு

- இந்தியா முழுவதிலும் இருந்து 60 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு (ஜிஐ) வழங்கப்பட்டுள்ளது.
- ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய அளவிலான தயாரிப்புகளுக்கு ஜிஐ டேக் வழங்கப்படுவது இதுவே முதல் முறை.
- ஆஷாரிகண்டி டெரகோட்டா கிராஃப்ட், ஜாபி (மூங்கில் தலைக்கவசம்), மிஷிங் கைத்தறி பொருட்கள், பிஹு தோல், போடோ டோகோனா, போடோ பெண்களின் பாரம்பரிய உடை அமைதியின் துணி அல்லது அஹிம்சை என குறிப்பிடப்படும் போடோ எரி பட்டு உட்பட பல பொருட்கள் அஸ்ஸாமில் புவிசார் குறியீடு பெற்றுள்ளன.
- போடோ ஜவ்ம்க்ரா (ஒரு பாரம்பரிய தாவணி), போடோ கம்சா (போடோ ஆண்களின் பாரம்பரிய உடை), போடோ தோர்கா (ஒரு இசைக்கருவி), மற்றும் போடோ சிஃபுங் ஆகியவையும் பட்டியலில் உள்ளன.
- கொட்டைகள், விதைகள் மற்றும் மசாலாப் பொருட்களின் கலவையுடன் பாலைக் கலந்து தயாரிக்கப்பட்ட பிரபலமான பனாரஸ் தண்டாய் என்ற பானமும் சேர்க்கப்பட்டுள்ளது.
- மகாசிவராத்திரி, ரங்பாரதி ஏகாதசி மற்றும் ஹோலியின் போது ஸ்ரீ காசி விஸ்வநாதர் கடவுளுக்கு பிரசாதமாக இந்த பானம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பனாரஸ் தப்லா, பனாரஸ் ஷெஹ்னாய், பனாரஸ் லால் பர்வாமிர்ச் மற்றும் பனாரஸ் லால் பேடா ஆகியவை இந்த பிராந்தியத்தில் புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளில் அடங்கும்.
- திரிபுரா பகுதி இரண்டு குறியீடுகளைப் பெற்றுள்ளது - ஒன்று பச்ரா-ரிக்னாய், இது விசேஷ சந்தர்ப்பங்களில் அணியும் பாரம்பரிய உடை, மற்றொன்று மாதாபாரி பேடா, இனிப்பு தயாரிப்பு.
- மேகாலயா கரோ ஜவுளி நெசவு, மேகாலயா லைர்னாய் மட்பாண்டங்கள் மற்றும் மேகாலயா சுபிட்சியும் புவிசார் குறியீடு பெற்றுள்ளது.

SURESH